[12th February 1958

Bridge across Cauvery at Tiruchirappalli.

* 63 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the amount allotted this year for the construction of the Cauvery Bridge at Tiruchirappalli;

(*b*) the amount so far spent; and

(*c*) when the bridge is expected to be completed?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Rs. 6 lakhs (excluding 7½ per cent agency charges).

(*b*) Rs. 2,96,749.

(*c*) By 31st December 1959.

SRI G. ANNAMALAI MUTHURAJA : அதவனூர் கிராமத்தில் ஒரு பாலம் 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்து கட்டப்பட்டிருக்கிறது. எல்லா வேலைகளும் முடிந்திருந்தும்கூட, அதற்கு இன்னும் திறப்புவிழா நடத்தாததற்கு காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் இதற்கு ஒரு தனி கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

SRI A. V. P. ASAITHAMBI : கொள்ளடம் பாலத்தைக் கடந்து செல்லும் வண்டிகளுக்கும், கார் வாகனங்களுக்கும் சுங்க வரி வசூலிக்சப்படுவது எதற்காக ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

Hindi.

* 64 *Q.*—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any scheme to encourage Government
9-10 a.m. Officials to learn Hindi; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.

* 75-*A* *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. Minister for Finance be pleased to state—

(*a*) whether any grant has been received from the Centre during 1956–57 for the spreading of Hindi in the State; and

(*b*) if so, the amount received and the amount utilised?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No grant has been received from the Centre during 1956–57.

(*b*) Does not arise.

* 75-*B* *Q.*—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the subsidy given by the Union Government to this State Government during the past three years for the propagation of Hindi; and

12th February 1958]

(*b*) the amount used by the State Government out of that subsidy?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Government of India have sanctioned Rs. 2,239 for the year 1955–56. They have not yet sanctioned any grants for the years 1956–57 and 1957–58. The matter is under correspondence with them.

(*b*) Government of India grant forms only a part of the total cost. The entire amount received during 1955–56 has been used.

SRI A. VEDARATHNAM PILLAI : இப்போது மத்திய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய வேலை நேரத்திலேயே ஹிந்திப் பயிற்சி பெறுவதற்கான வசதி செய்யப்பட்டிருக்கிறது. ராஜ்ய அரசாங்க உத்தியோகஸ்தர்களில், மத்திய அரசாங்கத்துடன் கடிதப்போக்குவரத்து தொடர்பு கொண்டுள்ள இலாகாக்களிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்காவது, ஹிந்திப் பயிற்சி பெறுவதற்கு அந்த மாதிரியான வசதியை சர்க்கார் செய்ய முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது அந்த அவசியம் ஏற்படவில்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது மத்திய அரசாங்கத்திற்கு நாம் இங்கிருந்து ஆங்கிலத்திலேயே பதில் எழுதலாம். அங்கிருந்து இங்கு வரும் கடிதங்களும் ஆங்கிலத்திலேயே வந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலை இன்னும் நீடிக்கும் என்ற காரணத்தால் நம் ராஜ்ய அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஹிந்தி கற்பிக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

SRI N. K. PALANISAMI : ஹிந்தியை கற்றுக்கொள்ளவேண்டுமென்ற உணர்வை அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ? அதாவது, இதற்கான திட்டம் சர்க்காரிடத்தில் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANAM : அதற்கான திட்டத்தைப்பற்றி நாம் நிறையப் பேசியிருக்கிறோம். மொழிப் பிரச்னையையும் கல்விப் பிரச்னையையும்பற்றி பேசும்போது அதைப்பற்றி நாம் நிறையப் பேசியிருக்கிறோம். இப்போது கேள்வி நேரத்தில், அதை வரிசைக்கிரமமாக எடுத்து கூற முடியாது.

SRI A. A. RASHEED; Sir, how can the Central Government expect to popularise Hindi with a sum of Rs. 2,239 only ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நாம் வகுத்த திட்டங்களில் சில திட்டங்களுக்குத்தான் மத்திய அரசாங்கத்தார் உதவி அளித்திருக்கிறார்கள். நாம் போட்டுள்ள திட்டத்திற்கு அவர்களிடமிருந்து நமக்கு வரவேண்டிய நிதித் தொகை எவ்வளவோ அவ்வளவுதான் பதிலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஹிந்தி கற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், ஹிந்தி கற்றவர்களுக்கும் ஹிந்தி கல்லாதவர்களுக்குமிடையே பாகுபாடு செய்யாத முறையில் சர்க்கார் நடக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த சர்க்காரைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட பாகுபாடு செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

SRI A. VEDARATHNAM PILLAI : ஹிந்தியைப் பரப்புவதற்காக நாம் மத்திய சர்க்காரிடம் கோரிய தொகை இந்த 2,000 ரூபாய்தானா, அல்லது மத்திய சர்க்கார் இதற்காக நமது சர்க்காருக்குக் கொடுப்பதாக வாக்காளித்த தொகை 2,000 ரூபாயா ? அவர்கள் அதிகத் தொகை கொடுப்பதாக வாக்களித்திருந்தால், நமது ராஜ்ய சர்க்கார் அந்தத் தொகையைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ளாதத்திற்குக் காரணம் என்ன ?

[12th February 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தத் தொகையின் அளவு நாம் எடுத்துக்கொண்ட திட்டங்களைப் பொறுத்திருக்கிறது. அவர்களுடைய திட்டப் பிரகாரம் நமது திட்டத்திற்கு அவர்களிடமிருந்து வர வேண்டிய தொகை ரூ. 2,000. அதை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஹிந்தியை இன்னும் அதிகமாகப் பரப்புவதற்காக அவர்களிடமிருந்து நாம் இன்னும் நிதி உதவி பெறுவதைப் பொறுத்தவரையில், "ஹிந்தியை எந்த முறையில் பரப்புவது என்பதைப்பற்றி இந்த சபையும் விவாதித்திருக்கிறது; சர்க்காரும் அது சம்பந்தமாகத் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறது" என்ற காரணத்தால் அந்தப் பிரச்னை இந்த சந்தர்ப்பத்தில் எழவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR : இந்தப் பணம் எப்படி விநியோகிக்கப்பட்டு செலவிடப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஹிந்தியைக் கற்றுக்கொள்வதற்கு ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கவேண்டுமா அல்லது ட்யூஷன் மூலம் ஹிந்தி கற்றுக்கொடுக்கப் படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தட்சிண பாரத ஹிந்திப் பிரசார சபையின் முயற்சிகளுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. அப்படி அளிக்கப்படும் நிதி உதவியில் பாதித் தொகை மத்திய சர்க்காரால் கொடுக்கப் படுகிறது.

SRI K. ANBAZHAGAN : சென்னை அரசாங்கத்தார், இந்த வட்டாரத்தில் ஹிந்தியைப் பரப்புவதில் காட்டும் அளவு அக்கறையை, இந்த மாநில அரசாங்க உத்தியோகஸ்தர்களில் தமிழ் தெரியாதவர்கள் தமிழ் கற்பதை ஊக்குவிப்பதற்கும் காட்டுகிறார்களா ? அதற்கான நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தமிழைப் பரப்புவதில் கனம் அங்கத்தினரைவிட எனக்கு அதிக ஊக்கம் இருக்கிறது என்பதை அவரே அறிவார் என்று நம்புகிறேன். தமிழைப் பரப்புவதற்கு வேண்டியவற்றையெல்லாம் நாங்கள் செய்துவருகிறோம்.

Deputation of State Police Force to Assam.

* 65 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have sent any Police Force to Assam to fight the Naga rebels; and

(*b*) if so, whether the expenditure is boren by the State Government or Union Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Malabar Special Police has been deputed to the Naga Hills area of Assam to perform guard and other duties.

(*b*) The expenditure is initially borne by this Government. The expenditure incurred up to 30th November 1957 will be recovered from the Assam Government. As the administration of the Naga Hills district has been taken over by the Government of India with effect from 1st December 1957, the expenditure incurred from that date will be recovered from the Government of India.

* 66 *Q.*—SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any Police force was deputed for service in the Naga Hills region;